# புறநானூற்றுப் புதையல்

## யார் கடவுள்?

கதை: இ.ஜே.சுந்தர் | ஓவியம்: ஷேக்

புலவர் மாங்குடி கிழார், மாங்குடி மருதனார் என்றும் அறியப்படுபவர். பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக்களப்புலவராக இருந்து பத்துப்பாட்டில் இடம்பெற்ற மதுரைக் காஞ்சியைப் பாடியவர். புறநானூற்றில் அவர் பாடிய 6 பாடல்களில் ஒன்று தமிழரின் வாழ்வுநெறியைப் புலப்படுத்துகிறது.








மங்கையின் கணவன்:
இங்குள்ள உணவுப்பயிர்களில் எவைசிறந்தவை ?
மா.கி: வரகு, தினை, கொள், அவரை -
இவற்றிற்கு இணையானவை இல்லவே இல்லை.
3
கணவர்:
ஏன்? விளக்குங்கள் ஐயா.
4
மா.கி: வரகைப் பறவைகள், ஆடுமாடுகள் உண்ணா. வரகு மனிதனுக்கானது. எல்லா நிலத்திலும் விளையும், 1000 ஆண்டாயினும் விதை முளைக்கும். தினையோ மழையின்றியும் வளரும். 70வது நாளில் கதிர்விடும். எந்தப் பூச்சியும் தாக்காது. உரமே தேவையில்லை.
ம.க:அப்படியா? மற்ற இரண்டு ..
மா.கி: கொள்ளு பருமனைக்குறைத்து உடலை இறுக்கும். மருந்திலும் விருந்திலும் பயனாகும். அவரையோ மூளை பலத்திற்கும், செரிமானத்திற்கும், சுவாசத்திற்கும் உதவும். நெல், கரும்புமுதலியனவந்தபின் இந்த நான்கின் சிறப்பு மறைந்துவிடக்கூடாது.
5


மங்கை: அந்தணர், அரசர் , வணிகர், வேளாளர் என்று பிரிக்கிறார்களே இதை ஏற்பீர்களா?
மா.கி: இந்தப்பிரிவு யாரோ புகுத்தியது. இந்த மண்ணுக்குரியதன்று. நம் மண்ணின் குடிகள் வேறு நால்வர்தான்.
கணவர்: ஐயா! யாரந்த நால்வர்?
6


மா.கி: மக்களோடு மக்களாய் இருந்து மகிழ்விக்கும் துடியன், பாணன், பறையன், கடம்பன் - இவர்களைவிட சிறந்த குடியினர் இல்லை.
மங்கை: இந்த நால்வரிடம் என்னய்யா சிறப்பு?
மாங்குடி கிழார்: வெள்ளை மலர்போல் உள்ளம் உடையோர். உணவுப்பயிர்போல் அனைவர்க்கும் அனைத்து நிலையிலும் பயன்படுவோர். செந்தண்மையில் அந்தணர்கள். மக்கள் மனங்களை ஆள்வதில் அரசர்கள். இசையைக்கொடுத்து அன்பைப்பெறுவதில் வணிகர்கள். மக்கள் மனதை இசையால் பண்படுத்துவதில் உழவர்கள்
கணவர்: உண்மையை உரக்கச் சொன்னீர் !
7


கணவர்: ஐவகை நிலங்களுக்குரிய தெய்வங்களை ஏற்கலாமா?
மா.கி: இந்தக் கடவுளரை நான் கண்டதில்லை.
கண்டவர்கள் வந்து சொன்னதுமில்லை.
மனைவி:
அப்படியாயின் இந்தக்
கடவுள்களை வழிபடக்கூடாதா?
மா.கி: பகைவர் படையெடுப்பைத் தடுத்து
யானையைக்கொன்று விழுப்புண்பட்டு இறக்கும் வீரன்.
8


மா.கி: நமக்காக உயிரை ஈந்த இவன் நடுகல்லில் நெல்தூவி நம் முறைப்படி
வழிபடுங்கள். இவனைத்தவிர வேறு கடவுள் நமக்கு இல்லை.
தமிழர் வாழ்வு நெறியைப்பறைசாற்ற அவர்
பாடிய கவிதை இது:
அடலருந் துப்பின் ....
குரவே தளவே குருந்தே முல்லையென்று
இந்நான் கல்லது பூவும் இல்லை;
கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது உணாவும் இல்லை;
துடியன், பாணன், பறையன், கடம்பனென்று
இந்நான் கல்லது குடியும் இல்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே (புறம் 335)
!
9